1973 பிப்ரவரி 10]

திரு. என். கிட்டப்பா : மாயூரத்தில் காவிரியின் குறுக்கே பாலம் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அளிக்கப்பட்ட தொகை, பக்கத்தில், சுற்று வட்டாரத்தில் உள்ள நிலங்களின் தொகை, அந்த நிலங்களுக்குள்ள பெருமானத் தொகையை விட மிகக் குறைவான தொகையாக இருப்பதால் நிலத்தைக் கொடுத்தவர்கள் சர்க்கார் கொடுக்கிற அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே, அதை மீண்டும் பரிசீலித்து அந்த ஆர்ஜிதத்திற்கான நியாயமான தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய விருப்பப்படி அவர்களுக்கு வேண்டிய தொகையைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். எனவே, நிலத்தை கையகப்படுத்துகிற அந்த கைய முயற்சியின் அடிப்படையில் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்டு பக்கத்திலுள்ள நிலங்களின் மதிப்பீட்டுகளையெல்லாம் கணக்கிட்டு இவற்றிற்கு எவ்வளவு நஷ்டயீடு தருவது என்ற முறையில் கணக்கிட்டுத்தான் அவர்கள் ஒரு கொள்கையை வகுத்திருக்கிறார்கள்—அந்தக் கொள்கைப்படி கொடுக்கப் படுகிறது. அதிகமாக அவர்கள் பெற விரும்புகிறார்கள் என்றாலும், நாம் கையாள்கிற ஒரு முறையிலிருந்து மாறுவதற்கில்லை. கொரநாடு, சித்தக்காடு நிலங்களில் ஈட்டுத் தொகையைப் பகிர்ந்தளிப்பதில் தகராறு இருப்பதால் நஷ்டயீட்டுத் தொகை மாயூரம் கீழ் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றம் விசாரித்து அந்தத் தொகையை அவர்களிடம் கொடுக்க, அதற்கான முயற்சி நீதிமன்றத்தின்முன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையகப் படுத்துகிற முறை இல்லாமல் பேரம் பேசி வாங்கலாம் என்றால், பேரம் பேசினால் அதிகத் தொகை கேட்கிறார்கள் என்பதற்காகத்தான் நிலத்தைக் கையகப்படுத்துகிற சட்டத்தின் அடிப்படையில் இந்த நிலங்களை நாம் பெறுகிறோம்.

திரு. என். கிட்டப்பா : அந்த நிலத்தை நம் அரசு ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னால் அவர்கள் ஒப்புதல் அளித்து நியாயமாக அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய தொகை தங்களுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நிலத்தைத் தந்த அந்த மக்களுக்கு இன்றையதினம் அந்தத் தொகை கிடைக்காத காரணத்தினால் கொடுக்கப்பட்டுள்ள தொகையை வாங்க மறுக்கிறார்கள். எனவே, இதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்குக் கொடுக்கப் படுகிற தொகை போதுமானதாக இல்லை என்று கருதினால் அவர்கள் வழக்கு தொடுத்து நீதிமன்றத்தில் அதை விசாரிக்கச் செய்து, நீதிமன்றம் பார்த்து

அதிகத் தொகை அதற்குக் கொடுக்கவேண்டுமென்று கருதுவார்களானால் அந்த வகையில் வேண்டுமானால் நாம் தரலாம். ஆனால் வருவாய்த் துறை அதை மறு படியும், அவர்கள் போட்டிருக்கும் கணக்கை மீறி அதிகமாகத் தருவது என்ற நிலை ஏற்படாது. குறைவு என்று கருதினால் நீதிமன்றத்தின் மூலம் பெற முயற்சி செய்யலாம்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கான ஊதியம்

*105. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ண யிக்க தமிழ்நாடு அரசு கமிட்டி ஏதேனும் அமைத்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் உறுப்பினர்கள் யார், யார்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு :—

(1) துணைத் தொழிலாளர் துறை ஆணையர் (நலம்), சென்னை —தலைவர்.

(2) புள்ளியல் துறை உதவி இயக்குநர் (சந்தை நிலவர புலனாய்வு), சென்னை—தனி உறுப்பினர்.

(3) உதவி இயக்குநர் (கைத்தறி), கைத்தறி மற்றும் நெசவு இயக்குநர் அலுவலகம், சென்னை—தனி உறுப்பினர்.

வேலை தருவோர் பிரதிநிதிகள் :

(4) திரு. டி. எஸ். வி. வி. தியாகராஜன், இயக்குநர், மேட்டுப்பட்டி கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம், சின்னாளம்பட்டி—உறுப்பினர்.

(5) திரு. ஆர். வெங்கடாசலம், தலைவர், கோயமுத்தூர் கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம், கோயமுத்தூர்—உறுப்பினர்.

(6) தலைவர், மதுரை மஹாலட்சுமி நெசவு கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம், காண்பாளையம், மதுரை—உறுப்பினர்.

(7) திரு. கே. பி. கவுண்டப்ப செட்டியார், தலைவர், சேலம் குகை கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் சங்கம், சேலம்—உறுப்பினர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1973 பிப்ரவரி 10]

தொழிலாளர்கள் பிரதிநிதிகள் :

(8) பரமத்தி திரு. கே. சண்முகம், வடிவேல்நகர், கரூர், உறுப்பினர்.

(9) திரு. எஸ். துரைசாமி, எம். எல். ஏ., பொதுச் செயலாளர், கோயமுத்தூர் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோயமுத்தூர், உறுப்பினர்.

(10) திரு. எஸ். ஜி. லட்சுமிநாராயணன், தலைவர், பரமக்குடி எமனேஸ்வரம் கைத்தறித் தொழிலாளர் சங்கம், பரமக்குடி, உறுப்பினர்.

(11) திரு. கே. ஜெயராமன், எம். எல். ஏ. சேலம், உறுப்பினர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்தக் குழு என்ன முறையிலே விசாரணை நடத்தியிருக்கிறது? அதன் அறிக்கை எப்போது வரும்? அதன் அடிப்படையில் எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, விரைவில் அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்று அக்குழுவின் தலைவர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். அதற்கு ஏற்ப அவர் தன்னுடைய பணியினைத் துவக்கியிருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த சம்பளத்தை நிர்ணயிக்க குழு அமைத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையைப் பற்றி ஆராய சந்தானம் குழு என்று ஒரு குழு அமைத்து இருக்கிறார்கள். இரண்டு குழுக்களும் இணைந்து பணிபுரிகின்றார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக்கேள்வி போடவும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஊதியக் குழு அமைத்து இருப்பது, பட்டு நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது இரண்டு பேர்களுக்கும் சேர்த்து ஆராயப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்களுக்காகத் தனியாக ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் தலைவர், உறுப்பினர்கள் பின்வருமாறு :

துணைத் தொழிலாளர் துறை ஆணையர், சென்னை—தலைவர்.

புள்ளியியல் துணை உதவி இயக்குநர் (சந்தை நிலவர புலனாய்வு), சென்னை—உறுப்பினர்.